பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**08 09 2026** **TUESDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** மக்கள் பிரதிநிதிகள் சமூக சேவையையும், தூய்மையையும் பின்பற்ற வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

**2)** வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் முதலமைச்சர் திரு விஜய் தலைமையில் இன்று நடைபெற்றது.

**3)** முன்னாள் படை வீரர்கள் மற்றும் விதவைகளுக்கான மாதாந்திர நிதியுதவி **6** ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று மாநில அமைச்சர் திரு ஆதவ் அர்ஜூனா அறிவித்துள்ளார்.

**4)** காவிரியில் அடுத்த **15** நாட்களுக்கு வினாடிக்கு **6** ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்க கர்நாடகாவுக்கு, காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

**5)** அகமதாபாதில் நடைபெறும் உலக பாரா வில்வித்தை போட்டியில் இந்தியா இன்று **2** தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளது

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

மக்கள் பிரதிநிதிகள் சமூக சேவையையும், தூய்மையையும் பின்பற்ற வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

குஜராத் மாநிலம் **Navsari**-யில் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், அரசின் நலத்திட்டங்கள் கடைக்கோடி மக்களையும் சென்று சேர நடவடிக்கை எடுக்க வேண்டும் வலியுறுத்தினார்.

பிரதமரின் ஸ்வநிதி திட்டம் மூலம், நடைபாதை வியாபாரிகளின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தூய்மைத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த உள்ளாட்சி நிர்வாகங்கள் பொதுமக்களுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்று திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் முதலமைச்சர் திரு விஜய் தலைமையில் இன்று நடைபெற்றது.

சென்னை தலைமைச்செயலகத்தில் இன்று சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

சென்னை மாநகராட்சியில் இந்த பணிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ள ஏதுவாக, அமைச்சர்கள் தலைமையில் மூத்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அனைத்து மாவட்டங்களிலும் துறை அலுவலர்களை கொண்ட ஒருங்கிணைப்புக்கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மழைநீர் விரைவாக வெளியேறும் வகையில், நீர்நிலைகளில் ஆகாய தாமரை அகற்றப்படுவதோடு, கால்வாய்கள் மற்றும் மழைநீர் வடிகால்களை தூர்வாருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

அறுந்துவிழக்கூடிய நிலையில் உள்ள மின்கம்பிகள், பலவீனமான மின் கம்பங்களை உடனடியாக சீரமைக்க வேண்டும் என்று அவர் உத்தரவிட்டார்.

வெள்ளநீரை உடனடியாக வெளியேற்ற மின் மோட்டார்கள், மின் ரம்பங்கள், ஜேசிபி போன்றவற்றை தயார் நிலையில் வைக்க வேண்டும் என்றும், மழைநீர் தேங்கும் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள மக்களை பாதுகாப்பாக வெளியேற்ற படகுகளையும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களை பாதுகாப்பாக தங்க வைப்பதற்கு ஏதுவாக சமுதாய நலக்கூடங்கள், பள்ளிகள் ஆகியவற்றை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும், மக்களுக்கு தேவையான உணவு மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடும் வகையில் சமுதாய உணவுக்கூடங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாநில அமைச்சர்கள் திரு ஆனந்த், திரு ஆதவ் அர்ஜுனா, திரு செங்கோட்டையன், திரு அருண்ராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதில், சென்னை உள்ளிட்ட ஆறு மாவட்டங்களின் ஆட்சியர்கள் காணொலி வாயிலாக கலந்துகொண்டனர்.

<<<<<>>>>>

தமிழக சட்டப்பேரவையில் அடுத்த ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பில், சாதிவாரி தொடர்பான விரிவான விவரங்களை அளிப்பதற்கான அம்சங்கள் இடம்பெற வேண்டும் என்று வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் திரு ஆதவ் அர்ஜுனா, மக்கள் தொகை கணக்கெடுப்பில்

சில அம்சங்கள் தொடர்பான விரிவான விவரங்கள் இடம்பெற வேண்டியது அவசியம் என்றார்.

இதனால், அரசின் திட்டங்கள் பயனாளிகளுக்கு முழுமையாக சென்றடையும் என்று அவர் கூறினார்.

எஸ் சி எஸ் டி, பிற்படுத்தப்பட்டோர், இதர பிற்படுத்தப்பட்டோர் என்று பொதுவாக கூறப்படும் நிலையில், இந்த பிரிவுகளில் உள்ள உட்பிரிவுகள் குறித்த விவரங்கள் தற்போதைய மக்கள் தொகை கணக்கெடுப்புப் படிவத்தில் இல்லை என்றும், அதற்கான வசதியை உருவாக்கித் தர வேண்டும் என்றும் மத்திய அரசை வலியுறுத்தினார்.

இந்த தீர்மானத்தின் மீது பேசிய உறுப்பினர்கள், முழுமையான விவரங்கள் தெரிவிக்கப்படாத நிலையில், இந்த மக்கள் தொகை கண்கெடுப்பு முழுமையான பலனளிக்காது என்று கருதுவதாக கூறினர்.

<<<<<<>>>>>

முன்னாள் படை வீரர்கள் மற்றும் விதவைகளுக்கான மாதாந்திர நிதியுதவி 6 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு ஆதவ் அர்ஜுனா அறிவித்துள்ளார்

தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அவர், ஒன்பது அறிவிப்புகளை வெளியிட்டார்.

தமிழக முதலமைச்சரின் உதவி மைய இணையதளத்தில் செயற்கை நுண்ணறிவு திறன்கொண்ட சேட் பாட் மற்றும் உரையாடும் வாய்ஸ் பாட் சேவையை உருவாக்க அரசு உத்தேசித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

முதலமைச்சரின் இணையதளத்தில் சமர்ப்பிக்கப்படும் மனுக்களின் நிலையை அறியவும், பொதுவாக மக்களுக்கு எழும் சந்தேகங்களுக்கு உடனுக்குடன் பதில்களை தரவும், இந்த இணையதளத்தில் வகை செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் தனியார் பல்கலைக்கழகங்களை தொடங்குவதற்கான சட்டத்திருத்த மசோதா இன்று நிறைவேற்றப்பட்டது.

சட்டப்பேரவையில் இதனை தாக்கல் செய்து பேசிய மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு விஸ்வநாதன், உயர்கல்வியில் மாநிலம் சிறந்து விளங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக கூறினார்.

இந்த சட்டத்திருத்தத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு குறைந்தபட்சம் 18 ஏக்கர் நிலம் போதுமானது என்று அரசு கூறியுள்ளது.

பெருநகர சென்னை தவிர இதர இடங்களில் தனியார் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு 25 ஏக்கர் நிலம் தேவை என்ற நெறிமுறையை அரசு வகுத்துள்ளது.

<<<<<<>>>>>

அறுவடை செய்யப்பட்ட விவசாயப் பொருட்களை சேகரித்துவைக்கும் சேமிப்பு கிடங்குகளுக்கான அங்கீகாரம் மூன்றாண்டுகளில் இருந்து ஐந்தாண்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதற்கான சட்டத்திருத்த மசோதாவை தாக்கல் செய்து பேசிய மாநில வேளாண்துறை அமைச்சர் திரு வினோத், வர்த்தகம் செய்வதற்கும், விவசாயிகள் பயனடைவதற்கும் கிடங்குகளின் அனுமதியை நீட்டிக்க அரசு உத்தேசித்துள்ளதாக கூறினார்.

ஏற்கனவே அனுமதி பெற்றுள்ள கிடங்குகளுக்கான அனுமதியை நீட்டித்ததுடன், ஆன்லைன் மூலம் அனுமதி பெறுவதற்கான வழிமுறை எளிமையாக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதனிடையே, தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

<<<<<<>>>>>

காவிரியில் அடுத்த 15 நாட்களுக்கு வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்க கர்நாடகாவுக்கு, காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில், நாளை முதல் இந்த தண்ணீரை திறந்துவிட வேண்டும் என்று கூறியுள்ளது.

முன்னதாக, கடந்த மாதம் 25-ஆம் தேதி, காவிரி ஒழுங்காற்றுக்குழுவின் பரிந்துரையின்படி, காவிரியில் இன்று வரை வினாடிக்கு 9 ஆயிரம் கனஅடிவீதம் தண்ணீர் திறந்துவிட காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டிருந்தது.

<<<<<<>>>>>

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 39 Sec.)***

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டம் வேடல் கிராமத்தில் இன்று தொடங்கப்பட்டுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை ஆட்சியர் திருமதி சினேகா இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---------------

மதுரை மாவட்டம் செக்கானூரணியில் சுமார் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நவீனப் பேருந்து நிலையத்தை ஆட்சியர் திரு நிஷாந்த் கிருஷ்ணா இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

-------------------

வேலூர் மாவட்டத்தில் புத்த மதத்தினர் நாக்பூர் தீக்ஷா பூமியில் விஜயதசமி அன்று நடைபெறும் தம்ம சக்கர பரிவர்தன திருவிழாவில் கலந்து கொள்பவருக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் விண்ணப்பித்து பயனடையுமாறு வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் லீலா அலெக்ஸ் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக பாரா வில்வித்தை போட்டியில் இந்தியா இன்று 2 தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளது.

அகமதாபாதில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Toman Kumar — Shyam Sundar** இணை **152 — 139** என்ற புள்ளிக் கணக்கில் ஈராக்கின் **Abbas — Anwar** இணையை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.

மற்றொரு போட்டியில் இந்தியாவின் அர்விந்தர் சிங் — விஜய் இணை தங்கப்பதக்கத்தை வென்றுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Bhawana — Pooja** இணை வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளது.

**<<<<<<END>>>>>**